<u>செய்தி வெளியீடு எண்: 173</u> <u>நாள் 22.04.2015</u>

# பால்வளத்துறை

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாஅவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு B V ரமணா அவர்கள் தலைமையில் பால் கூட்டுறவு ஒன்றியங்களின் பொது மேலாளர்கள் மற்றும் மாவட்ட துணை பதிவாளர்கள் (பால்வளம்) ஆகியோர் கலந்துகொண்ட மாநில அளவிலான ஆய்வுக்கூட்டம் இன்று 22.04.2015 மாதவரம் பால் பண்ணையில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு சுனீல் பாலீவால், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி

தமிழகத்தில் 2–ம் வெண்மைப்புரட்சியை ஏற்படுத்திட பால்வளத்துறை பல்வேறு பால்வள மேம்பாட்டுத்திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக தற்போது ஆவின் கொள்முதல் நாளொன்றுக்கு 28.89 இலட்சம் லிட்டர் ஆக உயர்ந்து சரித்திர சாதனை படைத்துள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு தரமான கால்நடைத்தீவனம் அதிக அளவு வழங்குவதற்காக தற்போதைய மாதந்திர விற்பனையான 5000 மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 8000 மெட்ரிக் டன் என்ற அளவிற்கு உயர்த்துவதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் தரமான பால் உற்பத்திக்கு கால் நடைத்தீவனம் அளிப்பதன் முக்கியத்துவம் பற்றி பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய முறையில் தெரிவிக்கவேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக லாபம் ஈட்டும் ஒன்றியங்கள் கால்நடைத் தீவன மானியமாக கிலோ ஒன்றிற்கு ரூ.2/– முதல் ரூ.4/– வரையும், மற்றும் தாது உப்புக் கலவைக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.25./-ம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த செய்தியினை பால் உற்பத்தியாளர்கள் அனைவரும் அறியும் வண்ணம் தெரிவித்து தூய பால் உற்பத்தி முறையை பின்பற்றி சுத்தமான தரமான பாலை சங்கங்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், மேலும் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பண பட்டுவாடா உரிய நேரத்தில் அளிக்கப்படவேண்டும் என்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

பால்கொள்முதல் உயர்ந்துள்ள நிலையில் பால், வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம் போன்ற பால் உப பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்கான புதிய வியாபார யுக்திகளை கடைபிடித்து விற்பனையை அதிகரிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். சென்னை மாநகரில் ஏழை எளிய மக்களும் ஆவின் பால் வாங்குவதற்கு ஏதுவாக 250 மி.லி பால்பாக்கெட்டுகளை ஆவின் உற்பத்தி செய்து வினியோகித்து வருகிறது. எனவே, 250 மி.லி. பால் பாக்கெட்டுகளை சில்லறை விற்பனை கடைகளில் அதிகஅளவில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த கூட்டத்திற்கு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் இணை நிர்வாக இயக்குநர் திருமதி ஆர்.கஜலட்சுமி, இ.ஆ.ப., துணைப்பால் ஆணையர் திரு எஸ்.துரைசாமி, பொது மேலாளர் (பணிக்குழு) திரு பி. பிரபாகர், பொதுமேலாளர்(விற்பனை) திரு எஸ்.கே.கதிர்வேலு, பொதுமேலாளர் (திட்டம்) திரு சி.லோகிதாஸ் மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**